**10** - ஆம் வகுப்பு

காலம் : 1.30 மணி

# இரண்டாம் இடைத்தேர்வு - 2024

## தமிழ்

பதிவு எண் 10007

மதிப்பெண்கள் : 50

குறிப்புகள் : 1. மாணவர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.

2. விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.

3. தேர்வெழுத நீலம் மற்றும் கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **7 X 1 =7**

1. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது ........

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

2. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

3. புறத்திணைகள் .............வகைப்படும்.

அ) 10 ஆ) 12 இ) 15 ஈ) 14

4. 'வீட்டைத் துடைத்து சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது .............

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

5. வெண்பா .......... ஓசை பெற்று வரும்.

அ) தூங்கல் ஓசை ஆ) துள்ளல் ஓசை இ) அகவல் ஓசை ஈ) செப்பல் ஓசை

6. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் ..............

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

7. மேன்மை தரும் அறம் என்பது ........

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

**II எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** **3 X 2 = 6**

8. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) எம்.எஸ். சுப்புலட்சுமி 1954 இல் தாமரையணி விருது பெற்றார்.

ஆ) உப்பளத் தொழிலாளர்களைப் பற்றிய புதினம் கரிப்பு மணிகள்.

9. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

10. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

11. குறிப்பு வரைக – அவையம்.

12. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?



Padasalai.Net

Scanned with CamScanner

**III** எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **3 X 2 = 6**

13\. கலைச்சொல் தருக.

அ) Patent ஆ) Philosopher

14\. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

அ) மயிலாப்பூர் ஆ) திருச்சிராப்பள்ளி

15\. மரபுத் தொடரைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) மனக்கோட்டை ஆ) கண்ணும் கருத்தும்.

16\. அகராதியில் கண்டு பொருள் எழுதுக.

அ) வாரணம் ஆ) ஆசுகவி

17\. பாய்ந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**IV** எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (20 ஆவது வினா கட்டாய வினா) **2 X 3 = 6**

18\. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டி பொருள் விளக்குக.

19\. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

20\. "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரம் பாடலை எழுதுக.

**V** எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **2 X 3 = 6**

21\. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

22\. அவந்தி நாட்டு மன்னன் மகத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

23\. வாலித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

**VI** எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **3 X 4 = 12**

24\. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

25\. காட்சியைக் கண்டு கவிதை எழுதுக.



26\. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

27\. மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் எழுதுக.

**VII** விரிவான விடையளிக்கவும். **1 X 7 = 7**

28\. அ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

*(அல்லது)*

ஆ) ராமானுசர் நாடக நிகழ்வுகளைத் தொகுத்து எழுதுக.

*******



Padasalai.Net

Scanned with CamScanner